பாறைகள் சிற்பம் செய்வதற்கான பாறைகள் அல்ல. அவை கோவில் கட்டுமானத்திற்காக இருக்கக்கூடிய பாறைகளாக, அடித்தளம் அமைக்கின்ற பாறைகளாக இருக்கலாம்; கற்பலகைகள் அல்லது நடைமேடைகள் போன்றவற்றைச் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மண் மலை, பொன் மலை, பொம்மை மலை என்பது உள்ளிட்ட ஒன்பது வகையான மலைகள் அங்கே இருக்கின்றன என்பதை நான் அறிவேன். அதில் பார்த்தால், அங்கு இருக்கின்ற மலையின் மேல் பகுதியில் தீ மூட்டி, அதன்மூலம் வெப்பத்தை உருவாக்கி, அதன் வழியாக அந்தக் கற்களையெல்லாம் உடைத்து, அவர்கள் அந்த process செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கற்களை வைத்து சிற்பங்கள் செய்யக்கூடிய அளவிற்கு வாய்ப்பில்லை. நான் குறிப்பிட்ட வகையிலே கட்டடம் மற்றும் அடித்தளம் போன்றவற்றிற்கு அந்தக் கற்களை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் அந்தக் கற்களை வைத்து அங்கே சிற்ப கலைக்கூடம் உருவாக்குவதற்கான அடிப்படையான வாய்ப்பு இல்லை.

ஆனால், அரசின் சார்பிலே, மகாபலிபுரத்தில் சிற்பம் மற்றும் கட்டடவியல் கல்லூரி இயங்கி வருகிறது. அதன் வாயிலாக, மகாபலிபுரத்திலேயே அருமையான சிற்ப கலைக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**32—**

## மீனவர்களுக்கு வீடுகள்

***167—திரு. S.S. பாலாஜி:**

மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*2021 செப்டம்பர் 8]*

*(அ) திருப்போரூர் தொகுதியில், திருப்போரூர், திருக்கழுக்குன்றம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு இலவசமாகக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாமல்லபுரம், கொக்கிலமேடு, சதுரங்கப்பட்டினம் மற்றும் அகரம் ஆகிய மீனவக் கிராமங்களில் வசிக்கும் மீனவர்களுக்கு குடியிருப்புகள் கட்டி வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள். அழகாக, சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. S.S. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொக்கிலமேடு, செம்மஞ்சேரி குப்பம், கரிக்காட்டுக் குப்பம் ஆகிய பகுதிகளில் கடலரிப்பைத் தடுப்பதற்கு கிட்டத்தட்ட ரூ.30 கோடி அளவில் Fish landing centre–ஐ அமைத்துக் கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பகுதிகளில் எத்தனை பயனாளிகள் பயன்பெறுகின்றார்கள் என்ற விவரத்தைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

மாமல்லபுரம், கொக்கிலமேடு, சதுரங்கப்பட்டினம் மற்றும் அகரம் ஆகிய மீனவக் கிராமங்களில் 59 மீனவர்களுக்கு வீடுகள் கட்ட ஆணை வழங்கப்பட்டு, அவற்றில் 39 வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 20 வீடுகளுடைய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

**திரு. S.S. பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகள் தவிர இன்னும் உள்ள ஏனைய மீனவக் குப்பங்களில் வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றவாறு தகுதிவாய்ந்த மீனவர்கள், தகுதிவாய்ந்த இடங்கள் இருக்குமென்று சொன்னால் அந்த இடங்களிலும் வீடுகள் கட்டித் தருவதற்கான நடைமுறைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி அவர்களுடைய அரசு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**33—**

## பூங்கா

***1917—திரு. கே. பொன்னுசாமி:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேந்தமங்கலம் தொகுதி, காரவள்ளி வனப் பகுதி நுழைவாயிலில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?*